# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

**6 - வகுப்பு** **தமிழ்**

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள்: 30

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 4×1=4

1) **சேர்த்து எழுதுக.**
இவை + எட்டும்

2) நாம் ................ சொல்படி நடக்க வேண்டும்.
அ) இளையோர் ஆ) ஊரார் இ) மூத்தோர் ஈ) வழிப்போக்கர்

3) கதிர் முற்றியதும் ................ செய்வர்.
அ) அறுவடை ஆ) உரமிடுதல் இ) நடவு ஈ) களையெடுத்தல்

4) பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக் கொள்வது ................ ஆகும்.
அ) வம்பு ஆ) அமைதி இ) அடக்கம் ஈ) பொறை

**II. சொற்றொடரில் அமைத்து எழுதுக:** 2×1=2

5) வகுப்பு

6) செல்வம்

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக:** 2×1=2

7) வண்டி இழுப்பது ................ (காலை / காளை)

8) காமராசரைக் 'கல்விக் கண் திறந்தவர்' என மனதாரப் பாராட்டியவர் ................

**IV. பிரித்து எழுதுக:** 2×1=2

9) கண்ணுறங்கு

10) பொருளுடைமை

**V. சேர்த்து எழுதுக:** 2×1=2

11) பொங்கல் + அன்று

12) மானம் + இல்லா

**VI. குறுவினா: (ஏதேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி)** 2×2=4

13) காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?

14) கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?

15) நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?

16) மயங்கொலி எழுத்துகள் யாவை?

17) கண்மணியே கண்ணுறங்கு பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?

**VII. சிறுவினா: (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி)** 1×3=3

18) காமராசரின் கல்விப் பணிகள் குறித்து எழுதுக.

19) காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?

**VIII. மனப்பாடப்பகுதி:** 3+2=5

20) 'வெள்ளத்து' எனத் தொடங்கும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

21) 'மன்னனும்' எனத் தொடங்கும் மூதுரைப் பாடலை எழுதுக.

**IX. கட்டுரை எழுதுக: (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி)** 1×6=6

22) அ) பொங்கல் திருநாள் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

**ஆ) காமராசர் என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

முன்னுரை, இளமைக்காலம், கல்விப்பணி, நிறைவேற்றிய பிற திட்டங்கள், முடிவுரை

www.Padasalai.Net



CamScanner